---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் (‘‘நிறுவனம்’’) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2017 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவன அதிகாரச்சட்டம், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால்

அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்கீட்டு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறன் அபிவிருத்தி உதவித்தொகைகளை | திறன் அபிவிருத்திக்காக பெறப்பட்ட பணத்தின் மீதியாக | பொறுப்புகள் சரியாக நிதிக்கூற்றுக்களில் |

| | | | |
|---|---|---|---|
| | வழங்குவதற்காக வரிசை அமைச்சிடமிருந்து பெறப்பட்ட ரூபா் 12,583,900 ஆன தொகையில் பயன்படுத்தப்படாத ரூபா 461,700 ஆன பெறுமதி பொறுப்பொன்றாக அங்கீகரிக்கப்படுவதற்குப் பதிலாக வருமானமாக அங்கீகரிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் மிகை அந்த அளவினால் அதிகமாகவும் மற்றும் நடைமுறைப் பொறுப்பு குறைவாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | ரூபா 461,700.00 ஆன பெறுமதி பணமாகச் செலுத்தப்பட்டதைக் கருத்தில் கொண்டு காட்டப்பட்டுள்ளது. | காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட கடன்பட்டோர் இருப்பு மீதியான ரூபா 2,126,701 இற்காக ரூபா 1,025,169 ஆன அறவிடமுடியாக்கடன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் , அப்பெறுமதி கணக்கிடப்பட்ட முறை மற்றும் அதற்கான கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | ஐந்து வருடங்களுக்கும் மேற்பட்ட கடன்பட்டோரை அறவிடமுடியாக் கடன்களாக கருதுவதே நிறுவனத்தின் அறவிடமுடியாக் கடன்கள் தொடர்பாக பின்பற்றப்படுகின்ற கொள்கையாகும். இது நிதிக்கூற்றுக்களில குறிப்புகளின் கீழ் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் மூன்று அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட மொத்தம் ரூபா 7,310,975 ஆன பணிக்கொடை செலவுகள் முறையாக கணக்கிடப்பட்டிருந்தும் அத்தொகை, ஆண்டிறுதியில் பணிக்கொடை ஒதுக்கீடுகளாகவும் கணக்கிடப்பட்டிருந்தது. அத்துடன் 07 அதிகாரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய ரூபா 2,728,263 இற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே, நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பணிக்கொடை செலவு மற்றும் பணிக்கொடை ஒதுக்கீடு ஆகியவற்றின் மீதி ரூபா 4,582,712 ஆல் அதிகமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் மூன்று அதிகாரிகளுக்கு செலுத்தப்பட்ட மொத்தம் ரூபா 7,310,975 ஆன பெறுமதி அட்டவணையில் அவர்கள் ஓய்வுபெறும் நாள் வரை அவர்களுக்குப் பொருந்தும் பணிக்கொடை ஒதுக்கீடுகளின் பெறுமதியாகும்.<br><br>மீளாய்வாண்டின்போது 7 அதிகாரிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய ரூபா 2,728,263 ஆன பெறுமதி விடுபட்ட காரணத்தால் 2023 இன் இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள மீதியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பணிக்கொடை ஒதுக்கீடு சரியாகக் கண்டறியப்பட்டு கணககீடு செய்யப்பட வேண்டும் |
| (ஈ) | பாதுகாப்பு இராஜாங்க அமைச்சினால் 2023 ஆம் ஆண்டில் பயிற்சி உபகரணமாக வழங்கப்பட்ட இரண்டு மோட்டார் வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. | இது தொடர்பாக சரிபார்த்து கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் சரியாகக் கண்டறியப்பட்டு கணககீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) ஆசிய அபிவிருத்தி வங்கி மானியத்தின் கீழ் (SSDP') செயல்படுத்தப்பட்ட மகளிர் வலுப்படுத்தும் செயற்திட்டத்தில் இருந்து பெறப்பட்ட வகுப்பறை உபகரணங்களின் பெறுமதியான ரூபா 6,332,423 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக சரிபார்த்து கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் சரியாகக் கண்டறியப்பட்டு கணககீடு செய்யப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நி.பி 396 | வழங்கப்பட்டும் ஆனால் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களுக்கும் மேற்பட்ட ரூபா 5,757,024 பெறுமதியான 07 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. . | குறிப்பிட்ட காசோலை கொடுப்பனவ் விவரங்கள் சரிபார்க்கப்பட்டு உடனடியாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனபதை தெரிவித்துக் கொள்கிறேன் | நிதிப் பிரமாணத்தினை பின்பற்ற வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை XV அத்தியாயத்தின் 4.10 ஆம் பிரிவு | கட்டாய சேவைக் காலப்பகுதிக்கு உட்பட்ட அதிகாரியொருவர் மீண்டும் உள்நாட்டு கற்கை விடுமுறை எடுககும்போது முதல் காலகட்ட கட்டாய சேவைக் காலத்தின் மீதியான காலத்தையும் ஒப்பந்தத்தில் சேர்க்க வேண்டியபோதிலும் , அவ்வாறு செய்யாமல் அதிகாரியொருவருக்கு கட்டாய சேவைக் காலப்பகுதியான 66 மாதங்களை விடுத்து உள்நாட்டு கற்கை விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. | தவறொன்றினால் காலப்பகுதி பிழையாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் எதிர்காலத்தில் ஒப்பந்தம் சரியாக செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.. | தாபன விதிக் கோவைக்கு இணங்குமாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். - |
| (இ) | 2022 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் PED 05/2022 இன் 3.2 ஆம் பந்தி | இலங்கையில் இருந்து வெளிநாட்டு விடுமுறைக்கு விண்ணப்பித்த இரண்டு உத்தியோகத்தர்களால் வெளிநாட்டில் ஈடுபட உத்தேசித்துள்ள வேலை மற்றும் | குறைபாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு, அமைச்சின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். - |

| | | | |
|---|---|---|---|
| | அது தொடர்பான தகவல்கல் விடுமுறையை அங்கீகரிக்கும் அதிகாரிக்கு சமர்ப்பிக்கப்படாததுடன் அவர்கள் வெளிநாட்டிற்கு சென்றிருந்தனர். | | |
| (ஈ) 2018 யூலை 18 ஆந் திகதிய 2018/03 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகாரம் பெறப்படாமல் நிறுவனத்தினால் வருகை கொடுப்பனவுகள், உற்பத்தி ஊக்கத்தொகைகள், மேலதிக கொடுப்பனவுகள், ஊக்கத்தொகைகள், விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்திற்கான கொடுப்பனவுகளாக ரூபா 17,558,037 செலுத்தப்பட்டிருந்தன. மேலும், உற்பத்தி ஊக்கத்தொகைகள் செயல்திறன் அளவீட்டு முறையொன்று தீர்மானிக்கப்படாமல் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன. | உற்பத்திச் ஊக்கத்தொகைக்காக அமைச்சினால் அங்கீகாரம் பெறப்படுவதற்கு திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் கடமைகள் முறையாக பேணப்பட்டு வரும் நோக்கத்திற்காக பிற கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிரந்ததுடன் எதிர்காலத்தில் அதற்கான அங்கீகாரம் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவு ரூபா 5,008,330 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 6,448,032 ஆக இருந்ததால் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 11,456,362 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம் முன்னேற்றத்திற்கு பகுதி நேர பாடநெறிக்கட்டணங்கள் வருமானம் ரூபா 51,628,266 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனச் சட்டத்தின் 16 வது பிரிவின்படி, பணிப்பாளர் சபையுடன் கலந்தாலோசிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட அமைச்சரினால் 06 | கருத்துரை வழங்கப்படவில்லை. | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுதற்கு நிர்வாகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உறுப்பினர்களைக் கொண்ட நிறுவனத்தின் ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன், அந்த ஆலோசனைக் குழுவால் சட்டத்தின் 04 வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பான அனைத்து விடயங்கள் பற்றியும் பணிப்பாளர் சபைக்கு மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு பரிந்துரைகள் வழங்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும்,மீளாய்வாண்டு வரை அத்தகைய ஆலோசனை நிறுவனமொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, நிறுவனத்தின் செயற்பாடுகள் முறையாக ஆலோசனை நிறுவனத்தின் ஆலோசனையின் அடிப்படையில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனச் சட்டத்தின் 4 வது பிரிவின் (இ),(ஏ) மற்றும் (ஔ) இன் கீழ் நிறுவனத்தின் பணியொன்றாக தொழில் பயிற்சி பற்றிய ஆராய்ச்சிகளை நடாத்துதல், பிராந்திய மையங்களை நிறுவுதல் மற்றும் தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி பற்றிய இதழ்கள் மற்றும் பருவ இதழ்களை வெளியிடுவது ஆகியவை குறிப்படப்படடிருந்தபோதிலும், அந்தப் பணிகள் மீளாய்வாண்டு வரையில் நிறைவேற்றப்படவில்லை. | இதற்காக ஆராய்ச்சி , அபிவிருத்தி மற்றும் புத்தாக்கப் பிரிவொன்று (Research & Development and Innovation) நிறுவப்பட்டுள்ளதுடன் அந்தப் பிரிவுக்குத் தேவையான பதவியணி மதிப்பீடு அங்கீகாரத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்காக இன்றுவரை பரிந்துரை / அங்கீகாரம் க் எதுவும் பெறப்படவில்லை. மாத இதழ்கள் மற்றும் பருவ சஞ்சிகைகளை வெளியிடுவதற்காக 05 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அது நடைபெற்று வருகின்றது. | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுதற்கு நிர்வாகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நிறுவனம் அனுபவித்து வருகின்ற மொத்தம் 29 ஏக்கர் மற்றும் 0.35 ஹெக்டயர் ஆன 05 காணிகள் இலங்கை போக்குவரத்து சபை மற்றும் இலங்கை புகையிரத | இந்த காணிகளின் உரிமையை முறையாக மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு | இக்காணியின் சட்டரீதியான உரிமை இனங்காணப்பட்டு கையகப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்திற்கு சொந்தமானவை என குறிப்பிடப்பட்டபோதிலும், அவற்றின் சட்டரீதியான உரிமையொனறு இனங்காணப்பட்டு கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் மேலதிக செயலாளரினால் (தொழில் பயிற்சி) போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளருக்கு 2024.01.24 ஆம் திகதி கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ஈ) | நிதிக் கூற்றுக்களில் 11 கணக்குப் விடயங்களுடன் தொடர்பான ரூபா 3,878,806 ஆனது 2016 ஆம் ஆண்டு முதல் முன் கொண்டு வரப் பட்டிருந்தபோதிலும், உரிய நிலுவைகள் குறித்து நிர்வாகத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த பெறுமதி நிறுவனத்தினால் MTTC பிரிவில் தனித்தனி கணக்குகள் தயாரிக்கப்பட்டபோது , பேரேட்டின் நடைமுறைக் கணககொன்றாக பராமரிக்கப்பட்டு வருகின்ற வரவு மற்றும் செலவு மீதிகள் 02 இல் வரவு மீதியைக் காட்டும் கணக்காகும். எனவே, இது தொடர்பாக ஆளுநர் சபைக்கு சமர்ப்பித்து, ஆளுநர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் நடைமுறைக் கணக்குகள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் திட்டவட்டமாக கண்டறியப்பட்டு அவற்றை தீர்வு காண்பதற்கு அல்லது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | நிறுவனத்தில் மாணவர்களை ஆட்சேர்க்கும் எண்ணிக்கை 600 ஆக காணப்பட்ட போதிலும், வருடாந்தம் அதிகரித்து வரும் கோரிக்கைகளுடன் ஒப்பிடும்போது, முறையான திட்டமொன்றின் மூலம் தேவைகள் சரியாகக் கண்டறியப்பட்டு பாடநெறிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும், இரத்மலானை பயிற்சி நிலையத்தின் இடவசதி மற்றும் கட்டிட வசதிகள் குறைவாக இருந்தாலும், ஆனமடுவையில் காணப்பட்ட 09 ஏக்கர் மற்றும் கிளிநொச்சியில் காணப்பட்ட 25 ஏக்கர் நிலப்பரப்பில் பயிற்சி நிலையங்களை நிறுவி பயிற்சி நடவடிக்கைகளை அந்தப் பகுதிகளில் விரிவுபடுத்துவதற்கு நிர்வாகத்தினால் உரிய | வருடாந்தம் மாணவர் ஆட்சேர்ப்பபை அதிகரிப்பதற்கு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டியதுடன் அதற்குத் தேவையான காணியை கையகப்படுத்தும் பணி தற்போது நடைபெற்று வருவதுடன் இடவசதி குறைவாக இருந்தபோதிலும் ஆட்சேர்க்கப்படுகின்ற மாணவர் எண்ணிக்கையை 600 முதல் 650 ஆக அதிகரிப்பதற்கு 2024 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. .<br><br>ஆனமடுவையில் எதிர்காலத்தில் புதிய | நிறுவனத்தின் திறனை அதிகரிப்பதற்கு முறையான திட்டத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | பாடநெறிகளை தொடங்குவதற்கு நிலையத்தின் தலைவருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.<br><br>கிளிநொச்சி நிறுவனத்தில் 5 புதிய NVQ 4 பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு 2024/04/29 அன்று நடைபெற்ற ஆளுநர் சபைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன் அதன் மூலம் அதன் இடப்பயன்பாடும் அதிகரிக்கப்படும். | |
| (ஊ) மாணவர்கள் பதிவு செய்ததில் இருந்து பயிற்சிக் காலம் முடிந்ததும் வேலைவாய்ப்பு (பின்தொடர்தல்) வரை தகவல்கள் பராமரிக்கப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தினால் அதற்காக சரியான தகவல் அமைப்பொன்று பராமரிக்கப்படாத காரணத்தால் நிறுவனத்தின் ஒட்டுமொத்த செயல்திறனை அளவிடுவதற்கு முடியாதிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | மாணவர்களின் பயிற்சி தேவைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய ஆதனம்,பொறி மற்றும் உபகரணம்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்திற்குச் சொந்தமான பணிப்பாளர்/அதிபரின் உத்தியோகபூர்வ இல்லம் 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து எந்தவொரு உத்தியோகத்தரின் பயன்பாட்டிற்கு அல்லது எவ்வித பாவனைக்கும் எடுக்கப்படாமல் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டபோதிலும் இந்த உத்தியோகபூர்வ இல்லத்தின் பாதுகாப்புக் கட்டணமாக 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை ரூபா 3,180,610 விளைவற்றதாக வீணாக | மக்கள் செறிந்து வாழும் பிரதேசத்தில் அமைந்துள்ள அதிபரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் காணப்பட்ட பெறுமதிமிக்க சொத்துக்களை பாதுகாப்பது அவசியமாகும். நிறுவனத்தின் முன்னாள் அதிபர்கள் உத்தியோகபூர்வ இல்லத்தினை பயன்படுத்தாததுடன் தற்போது அது திருத்தங்கள் செய்யப்பட வேண்டிய நிலையில் | விளைவற்ற சொத்துக்கள் உடனடியாக கணக்குகளில் சீராக்கப்பட்டு உரிய வகையில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலவிடப்பட்டிருந்தது. | காணப்படுகின்றது. மேலும் அது திருத்தங்கள் செய்ப்பட்டு தற்போதைய பணிப்பாளர் அதிபரின் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும். | |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தின் மனிதவள அபிவிருத்தி மற்றும் பயிற்சிக் கொள்கைகளுக்கு முரணாக, இலங்கை தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் பாடநெறியொன்றை கற்பதற்கு உத்தியோகத்தர் ஒருவர் விடுமுறை அங்கீகரிக்கப்படாமல் பாடநெறியில் பங்கேற்று இருந்தார். மேலும், பயிற்சி/கல்விப் பாடநெறிகளைத் தொடர்வதற்காக வழங்கப்படும் சம்பளத்துடன் கூடிய விடுமுறைக் காலம் அதிகபட்சமாக 03 வருடங்களுக்கு உட்பட்ட போதிலும், கல்விப் பதவியணியில் உத்தியோகத்தர் ஒருவருக்கு 05 வருட சம்பளத்துடன் கூடிய விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மேலும், கல்விப் பதவியணியில் உத்தியோகத்தர் ஒருவரால் சம்பளத்துடன் கூடிய உள்நாட்டு கற்கை விடுமுறை எடுக்கப்படும் போது ஒப்பந்தம் மற்றும் பிணைமுறி கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும், மூன்று உத்தியோகத்தர்களுக்காக கைச்சாத்திடப்பட வேண்டிய ரூபா 5,293,317 பெறுமதியான பிணைப் பத்திரங்கள் கையெழுத்திடப்பட்டிருக்கவில்லை. | தற்போது உள்நாட்டு கற்கை விடுமுறையில் உள்ள உத்தியோகத்தர்களின் வருகைக் குறிப்புகள் உரிய திகதியில் இருந்து இற்றைவரை அவர்கள் பயிற்சி பெறும் நிறுவனத்திடமிருந்து பெறப்படடுள்ளதுடன் எதிர்காலத்தில் குறிப்பிட்ட திகதியில் வருகைக் குறிப்புகளைப் பெற்றதன் பின்னர் சம்பளம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மனிதவள அபிவிருத்தி மற்றும் பயிற்சிக் கொள்கைகளுடன் இணங்குமாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) நிறுவனத்தின் அதிபர் பதவி 2024 மே 4 முதல் ஒப்பந்த அடிப்படையில் பேணப்பட்டு வந்த போதிலும் ஒப்பந்த காலத்தை நீட்டிக்காமல், உத்தியோகத்தர் சேவையில் வைக்கப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிரந்தர அதிபர் ஒரவர் பணியமர்த்தப்படும் வரை, அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் ஒப்பந்த அடிப்படையில் அந்த உத்தியோகத்தர் அதிபர் பதவியில் அமர்த்தப்பட்டுள்ளார். | ஒப்பந்த அடிப்படையில் காலாவதியாகிவிட்டதால், அது நீட்டிக்கப்படுவதற்கு அல்லது உரிய பிரகாரம் கையாளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |